Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

THURSDAY, JULY 10 2025

வியாழக்கிழமை 10, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 280 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



நீங்கள்

# “224 க்கா?: 158 க்கா?”

பாராளுமன்றத்தின் தற்போதைய சபாநாயகர் 224 எம்.பி.க்களினதும் சபாநாயகரா அல்லது 158 எம்.பி.க்களின் சபாநாயகரா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

தொடர்ச்சி P2

# சிறீதர் தியேட்டரில் மனித புதைகுழியா?

■ நிதர்சன் வினோத்

சிறீதர் தியேட்டரில்கூட மனித புதைகுழிகள் இருப்பதாக சமூக ஊடகங்களில் சில செய்திகளைக் காணக்கூடியதாக இருந்தது. அவ்வாறு புதைகுழி விவகாரத்துடன் ஈ.பி.டி.பி. தொடர்புப்படுத்த விரும்புகின்றவர்களுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் சவால் விடுத்தார்.



செம்மணியில் முன்னெடுக்கப்படும் அகழ்வுகளில் மனித எச்சங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வரும் நிலையில், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எக்காரணம் கொண்டும் புதைகுழி அகழ்வுகள் நிறுத்தப்படாமல் உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் "செம்மணி பகுதியில் முன்னெடுக்கப்படுகின்ற அகழ்வுப் பணிகளில் தொடர்ச்சியாக மனித எச்சங்கள் அகழப்பட்டு வருகின்றன. எமது பிரதேசத்தில் யுத்தம் நிலவிய காலத்தில் பல்வேறு

தொடர்ச்சி P2

# “அபுஹினுடன் பக்தும் அபுக்கு தொடர்பு”



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியைத் தேடுகின்றீர்கள் என்றால், ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் அபுஹின் தொடர்பில் கூறப்பட்டுள்ளது. அவருடன் தொடர்புடைய இன்னுமொரு அபு இருந்தார். பக்தும்அபு என்பவரே அவர். அவர் இஸ்ரேலை சேர்ந்தவர். அவர் ஆலோசனைகளை வழங்கியுள்ளார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தேசப்பற்றாளர்களின் அதிகாரத்திற்கு அச்சப்பட்டே அரசாங்கம் மனித புதைகுழிகள் விடயத்தில் கவனம் செலுத்தாது இருக்கின்றது செம்மணி


தொடர்ச்சி P2

பிள்ளையானின்

# தீவுச்சேனை அகழப்படுமா?

**செம்மணி மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் நீதி மறுக்கப்பட்டது**

**ஏன் இவற்றை இலங்கை அரசாங்கம் ஆய்வு செய்யவில்லை?**



ஆரையம்பதியில் கொல்லப்பட்ட விஜிதா, மட்டக்களப்பில் கொல்லப்பட்ட ரிபாயா, பிறேமினி மனித புதைகுழி இன்னும் அகழ்வுப்பணி ஆரம்பிக்கப்படாத பிள்ளையானின் தீவுச்சேனை ஆகியவற்றின் மீது ஏன் இன்னும் விசாரணை மேற்கொள்ளவில்லை? என இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் கேள்வியெழுப்பினார்.

அரசாங்கம் செய்த குற்றங்களை இன்னுமோர் அரசாங்கம் விசாரிப்பதில் சிக்கல்கள் உள்ளன என ஜனாதிபதி கூறியுள்ள நிலையில், உண்மையான நீதி வேண்டுமாயின் செம்மணி உள்ளிட்ட மனித புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் அவசியமானது என்றும் அவர் வலியுறுத்தினார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை, பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) அன்று முன்வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

செம்மணி மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் நீதி மறுக்கப்பட்டது என்பது நல்லிணக்கத்திற்கு பாதகமான ஒரு விடயம். பொறுப்புக்கூறல் என்பது நல்லிணக்கம் உருவாக முக்கிய விடயமாக உள்ளது.

தொடர்ச்சி P2

# போலி சி.ஐ.டிக்கு விளக்கமறியல்

■ கனகராசா சரவணன்

தான் விசேட குற்ற விசாரணை பிரிவு சி.ஐ.டி. என கூறி ஒரு இலட்சத்து 28 ஆயிரம் ரூபாவை மட்டக்களப்பில் இருவரிடம் பெற்றுக்கொண்டு மோசடி செய்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட போலி சி.ஐ.டியை ஒருவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் செவ்வாய்க்கிழமை (08) அன்று உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

# தோண்டத் தோண்ட வரும் எலும்புக்கூடுகள்

■ பு.கஜிந்தன்



யாழ்ப்பாணம் செம்மணி சித்தப்பாத்தி இந்து மயானத்தில் தொடர்ச்சியாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அங்கு அடையாளம் காணப்படும் மற்றும் மீட்கப்படும் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றமை மக்கள் மத்தியில் அச்சத்தையும்

தொடர்ச்சி P2

# நிசாந்த ஜயவீர எம்.பியானார்



தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி நிசாந்த ஜயவீர, பத்தாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன முன்னிலையில் புதன்கிழமை (09) அன்று சத்திப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

தொடர்ச்சி P2

# மறுத்தார் பிரதமர்



அரசாங்கம் இந்தியாவுடன் அண்மையில் கைச்சாத்திட்ட ஒப்பந்த விவகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் ஒப்பந்தம் தொடர்பான விடயங்களை தற்போது வெளிப்படுத்த முடியாது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) அன்று ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து கேள்வியெழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட எம்.பியான அஜித் பி பெரேரா, அரசாங்கம் இந்தியாவுடன் அண்மையில் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்கள் பற்றி பிரதமரிடம் கேள்வியெழுப்பியிருந்தேன். இந்த ஒப்பந்தங்களை முழுமையாக ஆராய்ந்து ஒப்பந்தங்கள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பதாகப் பிரதமர் கடந்த மாதம் குறிப்பிட்டார். ஆனால், இன்று வரையில் இந்த ஒப்பந்தங்கள் பற்றி எதுவுமே வெளிப்படுத்தப்படவில்லை.

தொடர்ச்சி P2



# நாக பூசணி அம்மன் ஆலய தேர்த் திருவிழா

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் – நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய தேர் திருவிழா, ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ, புதன்கிழமை (09) அன்று இடம்பெற்றது.

– பு.கஜிந்தன்

# “டீல் கிடையாது”

பிள்ளையானுடன் அரசாங்கத்திற்கு எந்த டீலும் கிடையாது. அவ்வாறு டீல் இருந்திருந்தால் இனிய பாரதி கைதாகியிருப்பரா? என்று தெரிவித்த பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க, மக்களை தவிர வேறு எவருடனும் அரசாங்கத்திற்கு டீல் கிடையாது என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) அன்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், செப்டெம்பர் 21ஆம் திகதியும் நவம்பர் 14ஆம் திகதியும்



தொடர்ச்சி P2

# சஹ்ரானுக்கு மேலே இருக்கும் தலைவர் யார்?

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் சஹ்ரானுக்கு மேல் ஒரு தலைவர் இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தெரிவித்திருந்தார். அப்படியானால் அவர் யார்? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான ரஞ்சித் மத்தும பண்டார கேள்வியெழுப்பினார்.

அதேபோன்று, இந்த சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணைக் குழுவுக்கு சாட்சி வழங்கச் சென்ற அதிகாரி, சாட்சியம் அளிப்பதற்குப் பதிலாக, பிரதான சூத்திரதாரி யார் என்பதைத் தூண்டு ஒன்றில் எழுதிக்



தொடர்ச்சி P2

# “தமிழில் பேசுவதால் எள்ளி நகையாடினர்”

தமிழ் மொழியில் பேசுவதால் எள்ளி நகையாடி எதிர்க்கட்சியினர் தமிழை கொச்சைப்படுத்துவதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கூறியதால் சபையில் ஆளும், எதிர்க்கட்சியினர் இடையே சர்ச்சை ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(09) அன்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே இந்த சர்ச்சை ஏற்பட்டது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சிறீதர் தியேட்டரில் மனித புதைகுழியா?

மனிதப் புதைகுழிகள் உருவாக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இதில் பல்வேறு தரப்புக்கள் சம்மந்தப்பட்டிருக்கின்றன என்ற தகவல்களும் இருக்கின்றன.

இவை தொடர்பாக கடந்த காலங்களில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் யார் என்பது வெளிக் கொண்டு வரப்படாத நிலையில், செம்மணியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின் அகழ்வுப் பணிகளும், அங்கு மீட்கப்படுகின்ற மனித எச்சங்களும், புதைகுழி விவகாரத்தினை மீண்டும் பேசு பொருளாக மாற்றி இருக்கின்றது

செம்மணி மாத்திரமல்ல, மன்னார், கொக்குளாய், துணுக்காய், மண்டை தீவு என்று எங்கெல்லாம், மனித புதைகுழிகள் இருக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம், அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். மனித எச்சங்கள் மீட்கப்படுமாயின் அவை எந்தக் காலப் பகுதியில் புதைக்கப்பட்டவை என்பது கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

சிறீதர் தியேட்டரில் புதைகுழி இருக்கின்றது. ஈ.பி.டி.பி. மக்களைக் கொலை செய்து புதைத்தது சமூக ஊடகங்களில் கருத்துக்களைப் பரவ விடுகின்றவர்கள் உரிய முறையிலே முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம். அதனை ஈ.பி.டி.பி. ஆவலுடன் எதிர்பார்க்கிறது என்றார்.

## தீவுச்சேனை அகழப்படுமா?

குறிப்பாக 1998/99 காலப்பகுதியில் சோமரட்ன ராஜபக்ஷ எனும் நபர் வாக்குமூலத்தின் அடிப்படையில் செம்மணி பிரதேசத்தில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 15 மனித எச்சங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த எச்சங்கள் ஸ்கொட்லாந்தில் கிளாஸ்கோவில் உள்ளதாக அறிகிறோம். ஏன் இவற்றை இலங்கை அரசாங்கம் ஆய்வு செய்யவில்லை? டிஎன்ஏ பரிசோதனை இலங்கை அரசாங்கத்திற்கு மேற்கொள்ள வசதிகள் இல்லாத நிலையில் ஏன் இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தின் உதவியை நாட தயங்குகின்றது? அன்று இந்த எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. இப்போதும் அங்கு அகழ்வுகள் நடக்கின்றன.

அரசாங்கம் செய்த குற்றங்களை அரசாங்கம் விசாரிப்பதில் சிக்கல்கள் உள்ளன என ஜனாதிபதி கூறியுள்ளார். இதனாலேயே நாங்கள் சர்வதேச விசாரணை ஒன்றை எதிர்பார்க்கின்றோம்.

அரசாங்கம் ஊழல் ஒழிப்பிற்கு விசேட அலுவலகம் ஒன்றை உருவாக்க யோசிப்பது போல் ஏன் மனித உரிமை மீறல்களை விசாரிக்க அலுவலகம் அமைக்கவில்லை? என்றும் வினவினார்.

## போலி சி.ஐ.டிக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த இருவர், வெளிநாடு செல்வதற்காக வெளிநாட்டு முகவர் ஒருவரிடம் பணத்தைக் கொடுத்து ஏமாந்த நிலையில், அந்த வெளிநாட்டு முகவருக்கு எதிராக மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்தனர்.

இதனை அறிந்து கொண்ட அந்த பகுதியைச் சேர்ந்த முன்னாள் இராணுவ புலனாய்வு பிரிவில் செயற்பட்டு வந்தவர், பாதிக்கப்பட்டவர்களிடம் நெருங்கி, தான் விசேட குற்ற விசாரணைப் பிரிவு சி.ஐ.டி., எனவே, குறித்த வெளிநாட்டு முகவரிடம் உடன் பணத்தை பெற்று வருவதாகவும் உடன் இந்த பணத்தை வாங்கி தர முடியும் அதற்கு பணம் தர வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, போலியான சி.ஐ.டியிடம் ஒருவர் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவையும் மற்றவர் 3 ஆயிரம் ரூபாய் உட்பட ஒரு இலட்சத்து 28 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளனர்.

இந்த நிலையில், வெளிநாட்டு முகவரிடம் பணத்தை வாங்கி கொடுக்காமல் நீண்ட நாட்களாக ஏமாற்றி வந்துள்ளதையடுத்து, அவரிடம் பணத்தைக் கொடுத்து ஏமாந்த இருவரும் பொலிஸ் நிலையத்தில் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர், அவரது வீட்டில் வைத்து திங்கட்கிழமை (7) இரவு கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து செவ்வாய்க்கிழமை அன்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 21ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## சஹ்ரானுக்கு மேலே இருக்கும் தலைவர் யார்?

கொடுத்தார். அது யார் என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) அன்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் பேசுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தைப் பயன்படுத்திக்கொண்டு 2019இல் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானார். அதேபோன்று, 2024இல் தேசிய மக்கள் சக்தி, இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதியளித்து அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதி பதவிக்கு வந்தார்.

ஆனால், இந்த தாக்குதல் காரண மாக அரசியல் கட்சியாக எமக்கே பாதிப்பு ஏற்பட்டது. அதேபோன்று, இந்த தாக்குதலில் பிரதானமாகப் பாதிக்கப்பட்டது கத்தோலிக்க மக்கள். அடுத்தபடியாக முஸ்லிம் மக்கள் அன்று ஏற்பட்ட அழுத்தம் காரணமாக எமது அரசாங்கத்தில் இருந்து முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகினார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதாகவும் தாக்குதலுக்குச் சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்துக்கு முன் கொண்டுவருவதாகவும் தெரிவித்து ஆட்சிக்கு வந்த, இந்த அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறைந்தபட்சம் இந்திய வெளிவிவாக அமைச்சர் நாட்டுக்கு வந்தபோது, இந்தியாவுக்குத் தப்பிச்சென்ற சாரா ஜெஸ்மின் தொடர்பில் கேட்டார்களா? ஆனால் அரசாங்கம் இது தொடர்பில் மிகவும் மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வருகிறது என்றார்.

## “224 க்கா?: 158 க்கா?”

அத்துடன், ஒழுக்கமாக செயற்படுமாறு எம்.பி.க்களை அறிவுறுத்த முன்னர் அந்த அறிவுறுத்தலை வழங்குபவர்கள் முதலில் ஒழுக்கமாக செயற்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.சமிந்த விஜேசிறி சாடினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) அன்று இடம்பெற்ற பிரதமருடனான கேள்வி நேரத்தின் போது, ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.அஜித் பி.பெரேரா, இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை வெளிப்படுத்துவதற்குப் பிரதமர் கால அவகாசம் கோரினார். ஆனால், இதுவரையில் பதிலளிக்கவில்லை. இந்த ஒப்பந்தத்தை வெளிப்படுத்துவதில் பிரதமருக்கு ஏதேனும் பிரச்சினை உள்ளதா என்று கேள்வி எழுப்பினார்

இதற்குப் பதிலளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, இந்த கேள்விக்குப் பதிலளிப்பதற்கு எனக்கு எவ்வித பிரச்சினையுமில்லை. இந்த கேள்விக்குப் பதிலளிப்பதற்கு நான் தயாராகவே இருந்தேன். இவர் ஏன் கலக்கமடைகிறார் என்பது தெரியவில்லை என்றார்.

இதனைத் தொடர்ந்து, எழுந்த சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க, பிரதமரிடம் கேள்வி கேட்கும் உறுப்பினருக்கு மேலதிக கேள்வி கேட்பதற்கு உரிமையுண்டு. முன்வைத்த கேள்விக்கு பிரதமர் பதிலளித்துக் கொண்டிருக்கும் போது, இன்னொருவர் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து கேள்வி கேட்கிறார்.இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டாமென சபாநாயகரை கோரினார். இதனைத் தொடர்ந்து எழுந்த ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. சமிந்த விஜேசிறி, பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின் போது நடைமுறை பிரச்சினைகள் பற்றி கேள்வி எழுப்ப முடியும் என்று குறிப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அவர் பேசுவதற்கு சபாநாயகரால் அனுமதி மறுக்கப்பட்டது.

இதனால் தர்க்கம் ஏற்பட்ட நிலையில், சமிந்த விஜேசிறி எம்.பி. சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை நோக்கி தற்போதைய பாராளுமன்றத்தின் சபாநாயகர் 224 எம்.பிக்களினதும் சபாநாயகரா அல்லது 158 எம்.பிக்களின் சபாநாயகரா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அத்துடன், ஒழுக்கமாக செயற்படுமாறு எம்.பிக்களை அறிவுறுத்த முன்னர் அந்த அறிவுறுத்தலை வழங்குபவர்கள் முதலில் ஒழுக்கமாக செயற்பட வேண்டும் என்றார்.

## “அபுஹினுடன் பக்தும் அபுக்கு தொடர்பு”

மனித புதைகுழி உள்ள இடத்திற்கு இதுவரையில் அரசாங்கமோ, காணாமல் போனோர் அலுவலகமோ செல்லவில்லை என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே ரவூப் ஹக்கீம் இவ்வாறு குற்றஞ்சாட்டிக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் அனைவரும் கவலையடையும் விடயமொன்று தற்போது இடம்பெறுகின்றது. அதாவது செம்மணியில் மனித புதைகுழிகள் அகழப்படுகின்றன. தினமும் அங்கு எலும்புக்கூடுகள் மீட்கப்படுகின்றன. சிறுவர்கள், குழந்தைகள் தமது விளையாட்டுப் பொருட்களுடன் புதைக்கப்பட்ட கொடூரமான சம்பவம் தொடர்பில் தினமும் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

குறிப்பாக, தமிழ் பத்திரிகைகளில் அந்தச் செய்திகளைப் பார்க்கலாம். ஆனால் தெற்கில் மற்றைய பத்திரிகைகளில் இது தொடர்பில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. எங்கேயாவது ஒரு மூலையில் சிறிதாகக் குறிப்பிடப்படுகின்றன.

யூடியுப் சனல் ஒன்றை நடத்தும் தரிந்து ஜயவர்தன என்பவர் அவ்விடத்திற்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று ஆராய்கின்றார். ஆனால், அரச தரப்பில் எவரும் இதுவரையில் அந்தப் பகுதியில் கால் வைக்கவில்லை என்று அங்கு அகழ்வு பணிகளில் ஈடுபட்டுள்ள குழுவினர் கூறுகின்றனர். இந்த விடயத்தில் அரசாங்கத்தின் பொறுப்பு என்ன? காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தினர் அங்குச் சென்றனரா? காணாமல் போனோர் தொடர்பான சட்டத்தின்படி உங்களுக்கு அதிகாரங்கள் உள்ளன.

இதேவேளை, அநீதிக்கு எதிரான ஜே.வி.பியின் இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். அது தொடர்பான ஆணைக்குழு அறிக்கைகள் பல உள்ளன. பல்வேறு மனித புதைகுழிகள் மற்றும் துன்புறுத்தல் நிலையங்கள் தொடர்பில் தகவல்கள் உள்ளன. இது தொடர்பில் என்ன செய்கின்றீர்கள்.

உங்களுடையவர்களின் மனித புதைகுழிகளைக்கூட இன்னும் அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் எதற்காக அமைக்கப்பட்டுள்ளது. சர்வதேசத்திற்கு முன்னால் எமது நாட்டின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படும் போது, பெயருக்கு கைக்கட்டிக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்கவா காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் இருக்கின்றது. அதிகாரங்களைப் பயன்படுத்த முடியும். அதனைச் செய்யாமல் இருப்பது ஏன்? உங்களின் தேசப்பற்றாளர்களுக்கு நீங்கள் பயத்துடன் இருக்கின்றீர்கள்.

சஹ்ரானின் மனையிடமும் முறையாக விசாரித்தால் இந்த விடயங்கள் தொடர்பில் அறிந்துகொள்ளலாம். இவரிடம் சாட்சியங்களைப் பதிவு செய்ய ஆணைக்குழு கேட்டபோது, சட்டமா அதிபர் திணைக்களம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. இறுதியில் அவரிடம் விசாரணை நடத்தியதுடன், பல்வேறு விடயங்களைப் பதிவு செய்துள்ளனர்.

ஜனாதிபதி காலத்தினால் மூடி மறைக்காமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதாக அண்மையில் ஜனாதிபதி கூறியுள்ளார். அரசாங்கம், அரசாங்கம் தொடர்பிலேயே விசாரணை நடத்துவதாகவும் கூறியுள்ளார். யார் அவர்கள் என்று நாட்டுக்கு வெளிப்படுத்துங்கள். நீங்கள் வயிற்றுக்குத் தெரியாமல் மருந்து குடிக்க முயற்சிக்க வேண்டாம். உண்மைகளை உண்மையாகவே வெளியிட இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும என்றார்.

## மறுத்தார் பிரதமர்

ஒப்பந்தங்கள் இன்றும் ஆராயப்படுகிறதா? அல்லது அவற்றை வெளிப்படுத்துவதற்கு ஏதேனும் பிரச்சினைகள் உள்ளதா? என்று வினவினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய ,அரசாங்கம் அண்மையில் இந்தியாவுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்த விவகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதனால் தற்போது ஒப்பந்தங்கள் தொடர்பில் எதனையும் வெளிப்படுத்த முடியாது. .நீதிமன்ற விசாரணைகளினால் தான் விடயங்களை வெளிப்படுத்த முடியவில்லை. இந்த விடயத்தில் இவர் ஏன்? கலக்கமடைகிறார் என்பது எமக்கு விளங்கவில்லை என்றார்.

## தோண்டத் தோண்ட...

அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

அந்த வகையில் இரண்டாவது கட்டத்தின் 13வது நாள் அகழ்வுப் பணிகள் செவ்வாய்க்கிழமை (09) முன்னெடுக்கப்பட்டது. அந்த வகையில் 56 எலும்புக்கூடுகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் 50 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில், தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ்சோமதேவாவின் குழுவின் பங்கேற்புடன் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ்சோமதேவாவினால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதியிலும் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அந்த எலும்புக்கூடுகள் சிக்கலான நிலையில் காணப்படுகிறது.

மேலும் முறைப்பாட்டாளரான குறித்த மயானத்தின் நிர்வாகத்தில் உள்ள கிருபாகரன், சட்டத்தரணி க.சுகாஷ், சட்டத்தரணி ரணித்தா ஆகியோர் புதைகுழியை பார்வையிட்டனர்.

குறித்த புதைகுழி விவகாரமானது சர்வதேச ரீதியில் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், அதற்கு நீதி வேண்டி பல்வேறு நாடுகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நிசாந்த ஜயவீர...

தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப் பட்டியல் ஊடாகப் பத்தாவது பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட முன்னாள் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு உஸ்ஹெட்டிகே தொன் நிசான்த ஜயவீர இவ்வாறு தேசியப் பட்டியலின் ஊடாக நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைத் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த ஜூலை 07ஆம் திகதி வெளியிட்டிருந்த நிலையில் அவர் புதன்கிழமை (09) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகமாகப் பணியாற்றிய அவர், குறித்த திணைக்களத்தின் பல்வேறு பதவிகளில் 25 வருடங்களுக்கு அதிகமான காலம் பணியாற்றியுள்ளார். 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல் டிசம்பர் வரையில் மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாகவும் பணியாற்றிய இவர், அதன் பின்னர் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளராகவும் பணியாற்றினார்.

களனி பல்கலைக்கழகத்தின் பௌதீக விஞ்ஞானத்தில் விசேட பட்டத்தைப் பெற்ற ஜயவீர, குறித்த பல்கலைக்கழகத்தில் பொருளியலில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றிருப்பதுடன், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வரிவிதிப்புத் தொடர்பான வணிக முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். அத்துடன், களனி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பெற்றுள்ள இவர், இந்தியா, ஜப்பான், மலேசியா, தாய்லாந்து, நெதர்லாந்து நாடுகள் பலவற்றில் பொருளியல் மற்றும் வரிஅறவீடு குறித்து கற்றுள்ளார்.

## “டீல் கிடையாது”

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்கவும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கவும் நடவடிக்கை எடுப்போம் என்ற வாக்குறுதியளித்தே ஆட்சிக்கு வந்தோம். அந்த வாக்குறுதியில் இருந்து ஒரு துளியளவேனும் விலக மாட்டோம். விசாரணைகளைத் துரிதமாக முடித்து சகல இலங்கையர்களுக்கும் நீதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவே முயற்சிக்கின்றோம். ஆனால், பல்வேறு காரணங்களால் இதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், நாங்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்பதனை உறுதியாகக் கூறிக்கொள்கின்றோம்.

இதேவேளை, இந்த விடயத்தில் தவறான கருத்துக்களைப் பரப்ப வேண்டாம். இது மக்களின் அரசாங்கமே. இந்நிலையில், பிள்ளையானுடன் டீல் இருப்பதாகவும் கூறினர்.

அவ்வாறு டீல் இருந்தால் அவருடன் இருந்த இனிய பாரதியை நாங்கள் கைது செய்வோமா? அவ்வாறு எவருடனும் டீல் கிடையாது. மக்களுடனேயே டீல் உள்ளது. அந்த டீலை முறையாக செயற்படுத்துவோம் என்றார்.

## “தமிழில் பேசுவதால் எள்ளி நகையாடினர்”

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, நாட்டில் 2015 ஆம் ஆண்டு முதல் தற்போது வரையில் மீன அறுவடை தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

இவ்வேளையில் இடையில் எழுந்த ஹெக்டர் அப்புஹாமி, அதனை நீங்கள் சபைக்கு ஆற்றுப்படுத்துங்கள். நாங்கள் கேட்காத விடயங்களையும் நீங்கள் கூறிக்கொண்டு போகின்றீர்கள். நீங்கள் கூறியதில் இருந்து இடைக் கேள்விகளையும் கேட்க முடியாது உள்ளது என்றார். இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஹெக்டர் அப்புஹாமி கூறியதை கேட்டு சிரித்தனர்.

இதனை தொடர்ந்து எழுந்த சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க, அப்படியென்றால் தனி வாக்கியத்தில் பதிலளிக்குமாறு நாங்கள் அமைச்சர்களுக்கு கூறுகின்றோம். அமைச்சர் தாய் மொழியிலேயே பதிலளித்தார். அதில் ஏதும் சிக்கல் உள்ளனவா என்றும் தெரியவில்லை என்றார்.

இதன்போது மீண்டும் எழுந்த ஹெக்டர் ஹப்புஹாமி, மொழி தொடர்பான பிரச்சினையை கூறவில்லை என்று தெரிவித்து, தனது இடைக் கேள்விகளை கேட்டார். இதனை தொடர்ந்து அமைச்சர் சந்திரசேகரன் பதிலளிக்கையில், எனது தாய்மொழி தமிழே. கேள்வியொன்று கேட்கப்படும் போது பதிலை விளக்கமாக வழங்க வேண்டும். அதனை எனது தாய் மொழியிலேயே கூறினேன். ஆனால் எதிர்க்கட்சியினர் தமிழை பார்த்து எள்ளி நகையாடுபவர்களாகவும், தமிழை கொச்சைப்படுத்துபவர்களாகவும், தமிழுக்கு இழுக்கு ஏற்படுத்துபவர்களாகவும் மாறியுள்ளனர் என்று கூறி எதிர்க்கட்சி உறுப்பினரின் கேள்விக்கு தொடர்ந்தும் பதிலளித்தார்.

வாகனங்களின் விலை

# மீண்டும் பாரியளவில் உயரும் அபாயம்?

வாகன இறக்குமதிக்காக அரசாங்கம் முன்னதாகவே ஒதுக்கிய 200 மில்லியன் அமெரிக்க டொலரை பயன்படுத்த நிபந்தனைகள் ஏதும் விதிக்கப்படுமானால், அது உள்ளூர் வாகனச் சந்தையில் பாரிய விலை உயர்வை ஏற்படுத்தும் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே எச்சரித்துள்ளார்.

இறக்குமதிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு, ஆரம்பத்தில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டன. இதனடிப்படையில் வாகன இறக்குமதிக்காக சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள வங்கி நாணயக் கடிதங்களை நிதி நிறுவனங்கள் திறந்துள்ளன.



இந்தநிலையில், மீதமுள்ள 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் திட்டமிட்டபடி இறக்குமதிக்குக் கிடைக்குமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அரச அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என, இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

எனினும், வாகன இறக்குமதி விடயத்தில் தேவையற்ற பயம் உருவாக்கப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ கூறியுள்ளார்.

வாகன இறக்குமதிக்காக ஒதுக்கப்பட்ட நிதி வரம்பை நீக்குவது குறித்து எந்த கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மாவனெல்லையில் விபத்து

■ என்.ஆராச்சி



கொழும்பு - கண்டி வீதியில் மாவனெல்ல, ஹிகுல பிரதேசத்தில், புதன்கிழமை (09) காலை 6.45 மணியளவில் வாகன விபத்து ஏற்பட்டுள்ளது.

சீமெந்து ஏற்றிக்கொண்டு பயணித்த பிராக்மோர் லொறி, கண்டியில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த போது, லொறியை கட்டுப்படுத்த முடியாமையால், வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியுள்ளது.

இதனால், லொறி வீதியில் இருந்து விலகி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என தெரியவந்துள்ளது.

## சிங்கமலை குளத்தில் விழுந்த மாணவன் சடலமாக மீட்பு

■ மலையக நிருபர்கள்



ஹட்டன், சிங்கமலை குளத்தில் தவறி விழுந்து காணாமல் போன 17 வயதுடைய மாணவனின் சடலம் கடற்படை சுழியோடிகளின் உதவியுடன் புதன்கிழமை (09) அன்று மீட்கப்பட்டுள்ளது.

கொட்டகலை கேம்பிரிஜ் கல்லூரியில் சாதாரண தரம் கற்று பரீட்சை பெறுபேறுக்காக காத்திருந்த தமிழ்மாரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் செவ்வாய்க்கிழமை(08) மாலை தனது நண்பர்களுடன் குளத்தில் புகைப்படம் எடுக்க சென்று தனது கால்களை கழுவதற்காக சென்ற போது வழுக்கி குளத்திற்குள் விழுந்துள்ளார். குறித்த மாணவனின் பெற்றோர் வெளிநாட்டில் பணி புரிவதுடன், அவர் ஹட்டன் பிரதேசத்தில் வாடகை வீடொன்றில் தக்கியிருந்து கல்விகற்று வருவதாகவும் சம்பவ தினத்தன்று பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்வதாக கூறி வாடகை வீட்டில் இருந்து சென்றுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் ஹட்டன் நகருக்கு குடிநீரை விநியோகிக்கும் குறித்த குளத்தில் தற்போது நீர்மட்டம் அதிகமாக உள்ள நிலையில் கடும் சிரமத்திற்கு மத்தியில் கடற்படை சுழியோடிகளால் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

## துஷார உப்புல்தெனிய பிணையில் விடுதலை



தகுதியற்ற கைதிகளுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்காக ஆவணங்களை போலியாக தயாரித்தது தொடர்பான குற்றச்சாட்டில் முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உப்புல்தெனிய பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க, சந்தேக நபருக்கு 25,000 ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் தலா 2 மில்லியன் ரூபாய்க்கான இரண்டு சரீரப் பிணைகளுடன் பிணை வழங்கினார்.

சந்தேக நபர் இலங்கையில் உள்ள எந்த சிறைச்சாலைக்கும் நுழைவதைத் தடை செய்யவும் நீதவான் உத்தரவிட்டார்.

## பெருந்தொகையான கேரள கஞ்சா மீட்பு



யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று பகுதியில் திங்கட்கிழமை (7) அன்று இரவு பெருந்தொகையான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

புலனாய்வுத் துறையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு விசேட அதிரடிப் படையினரால் திங்கட்கிழமை (7) அன்று இரவு குறித்த விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, 8 பொதிகளில் அடங்கிய 15.795 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மருதங்கேணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## யாழில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

■ நிதர்சன் வினோத்



யாழ்ப்பாணம் - முலவைச் சந்தி அருகில் இருந்து ஒருவர் சடலமாக புதன்கிழமை (09) காலை மீட்கப்பட்டுள்ளது.

அழகரத்தினம் கிறிஸ்டி பால்ராஜ் (48 வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் உள்ளிட்ட சிலர் செவ்வாய்கிழமை (08) அன்று இரவு மதுபானம் அருந்தியதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தற்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முந்திரிகை பருப்பு கொள்வனவில் மோசடி செய்த நபர் கைது

■ கனகராசா சரவணன்

மட்டு. ஏறாவூரில் முந்திரிகை பருப்பு வர்த்தகர் ஒருவருக்கு காசோலையை வழங்கி 11 இலட்சம் ரூபாவுக்கு முந்திரிகை பருப்பை கொள்வனவு செய்த பின்னர், வழங்கிய காசோலைக்கான பணத்தை வழங்காது மோசடி செய்த ஒருவர் ஏறாவூர் பிரதேசத்தில் வைத்து மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் செவ்வாய்கிழமை (08) அன்று கைது செய்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் முந்திரிகை பருப்பு வர்த்தகத்தில் ஈடுபடும் ஒருவரிடம் அந்த பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் திகதி ஒன்று இடப்பட்டு 11 இலட்சம் ரூபாய் காசோலை ஒன்றை வழங்கி முந்திரிகை பருப்பை கொள்வனவு செய்துள்ளார். குறித்த திகதியில் முந்திரிகை பருப்பை கொள்வனவு செய்தவர் வழங்கிய காசோலையை கொடுத்து பணத்தை பெற்றுக் கொள்வதற்காக வங்கிக்கு சென்று காசோலையை வழங்கியபோது, அந்த காசோலைக்கான பணம் வங்கியில் வைப்பில் இல்லாததையடுத்து காசோலை திரும்பியது. இதனையடுத்து, திரும்பிய காசோலைக்கான பணத்தை குறித்த நபரிடம் தொடர்பு கொண்டு வாங்க முயற்சித்த போதும், அது முடியாததையடுத்து, மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவிடம் காசோலை மோசடி தொடர்பாக குறித்த நபருக்கு எதிராக முறைப்பாடு செய்தார்.

இச்சம்பவம் தொடர்பாக காசோலையை வழங்கிய நபரை திங்கட்கிழமை (07) அன்று ஏறாவூரில் வைத்து கைது செய்து செவ்வாய்க்கிழமை (08) ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர் குற்றத்தை ஒப்பு கொண்டு அதற்கான பணத்தை வழங்குவதாக நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

வீடுகளுக்குள் புகும்

## இனந்தெரியாத குழுவால் தொழிலாளர்கள் அச்சம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ




ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா- தரவல மாணிக்கவத்தை தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு இனந்தெரியாத குழுவினர் இரவில் நுழைந்ததால் அப் பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.


முகத்தை மூடிய ஒரு குழு, விடியற்காலையில் ஜன்னல்கள் மற்றும் கூரைகளைத் திறந்து வீடுகளுக்குள் நுழைந்து வீடுகளுக்குள் சுற்றித் திரிவதாகத் தோட்டத் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

“அந்த நேரத்தில் மின்சார விளக்குகளை எரியவிட்டாலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் அந்தக் குழுவை அடையாளம் காண முடியவில்லை, எனவே அக்கம்பக்கத்தினர் உதவிக்காக கூச்சலிடும் போது அந்தக் குழு தப்பி ஓடுகிறது.

இந்தக் குழு எதற்காக தங்கள் வீடுகளுக்குள் வந்து தோட்டத் தொழிலாளர்களைப் பயமுறுத்துகிறது என்பது எங்களுக்குத் தெரியாது என்றும், இது குறித்து தோட்ட மேலாண்மை அதிகார சபை மற்றும் ஹட்டன் பொலிஸார் அதிகாரிகளுக்குத் தகவல் அளித்த பிறகு, இரவில் தோட்டத்தில் சுற்றித் திரியும் குழுவைப் பிடிக்கத் தோட்ட வீடுகளில் தங்கள் தோட்ட இளைஞர்கள் காவல் காத்து வருகின்றனர்” என்றும் தோட்டத் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு வீட்டிற்குள் நுழைந்த அடையாளம் தெரியாத ஒருவரின் கால் தடம் வீட்டில் பதிவாகியுள்ளதாகவும், மற்றொரு வீட்டில் உள்ள பாதுகாப்பு கேமராவில் அந்த நபர் முகத்தை மூடிக்கொண்டு நடந்து செல்வது தரவு அமைப்பில் பதிவாகியுள்ளதாகவும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக, தோட்டத் தொழிலாளர்கள் அன்றாட வேலைக்கு தேயிலை தோட்டத்திற்குச் செல்ல அச்சபடுவதாகவும், தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளும் பாடசாலைக்குச் செல்ல தயங்குவதாகவும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.



## ஒட்டுசுட்டான் திருவேட்டை உற்சவம்

■ சண்முகம் தவசீலன்

வரலாற்று சிறப்புமிக்க ஒட்டு சுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் 2025 ஆம் ஆண்டு மஹோற்சவத்தின் 13 ஆவது உற்சவமான திருவேட்டை உற்சவம் திங்கட்கிழமை(07) மாலை மிக சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு தங்களது நேர்த்திக்கடன்களுக்காக வேடுவ வேடம் அணிந்து வேட்டையாடும் அந்த உற்சவத்தில் கலந்து கொண்டதோடு வீதிகளெங்கும் எம்பெருமானுக்கு கும்பங்கள் வைத்து மக்கள் வரவேற்று இருந்தனர்

வரலாற்றுச் சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் 2025 மகோத்சவம் கடந்த மாதம் ஆரம்பமாகி திங்கட்கிழமை(07) வேட்டை திருவிழாவும் செவ்வாய்க்கிழமை (08) சப்பரத் திருவிழாவும் புதன்கிழமை(09) அன்று தேர்த் திருவிழாவும் நடைபெற்றது.











# ‘எய்ட்ஸ்’, ‘எச்.ஐ.வி’ தொடர்பில் விழிப்புணர்வு அவசியம்

ஆதாரமற்ற எச்.ஐ.வி. பயத்தால் குளியாப்பிட்டியில் ஒரு மாணவி பாடசாலையை இழந்தது இலங்கையில் மட்டுமல்ல, சர்வதேச அளவிலும் 2016ஆம் ஆண்டு விவாதப் பொருளாகி இருந்தது என்பதை நாங்கள் அறிவோம். இவ்வாறான நிலையிலேயே, மஹியங்கனை பகுதியில் 15 வயது குழந்தை ஒன்றுக்கு எய்ட்ஸ் நோய் இருப்பது சமீபத்தில் தெரியவந்தது.

சில குழந்தைகள் பாடசாலைக்குச் செல்வதாகவோ அல்லது மேலதிக கல்வி வகுப்புகளுக்குச் செல்வதாகவோ கூறி காட்டுக்குச் செல்கிறார்கள். இந்தக் குழந்தைகளுக்கு நோய்கள் உருவாகின்றன என உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் ஜி.டபிள்யூ.பி.எஸ். பாலிபன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சம்பவத்தை, கணக்கில் எடுக்காமல் விட்டுவிடக்கூடாது. ஆகக் கூடுதலான கவனத்தைச் செலுத்தி, ‘எய்ட்ஸ்’, எச்.ஐ.வி மற்றும் அதன் பரவல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். , ‘எய்ட்ஸ்’, எச்.ஐ.வி எவ்வாறு பரவுகின்றது என்பது தொடர்பில், முழுமையாக தெளிவுபடுத்த வேண்டும், பாடசாலை மட்டத்தில் இருந்து இந்த விழிப்புணர்வு செயற்றிட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

ஒருவரின் உடலில் நான்கு வகையான திரவங்கள் மட்டுமே இன்னொருவருக்குப் பரவுகின்றன. முதலாவது இரத்தம். இரத்தத்தில் அதிக செறிவு உள்ளது. இரண்டாவது மற்றும் மூன்றாவது வகைகள் யோனி சுரப்புகள் மற்றும் விந்து. கடைசி வகை தாய்ப்பால். ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பரவுகின்றது.

இரத்தத்தைத் தொடுவதன் மூலம் ஒருவருக்கு எச்.ஐ.வி. வருமா? முற்றிலும் இல்லை. இந்த எச்.ஐ.வி வைரஸ் சளி சவ்வுகள் வழியாக மட்டுமே உடலில் நுழைய முடியும். காயம் உள்ள ஒருவரின் இரத்தம் ஏதோ ஒரு காரணத்திற்காக மற்றொருவரின் கையில் படுகிறது என்று வைத்துக்கொள்வோம். ஆனால் என் கையில் வெட்டு இல்லை என்றால், எச்.ஐ.வி வைரஸ் எனக்குள் நுழைய முடியாது.

உண்மையில் பாலியல் உடலுறவின் போது மட்டுமே விந்து மற்றும் யோனி திரவங்களைப் பரிமாறிக்கொள்ள முடியும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உடலுறவின் போது மட்டுமே. யோனி, ஆசனவாய் அல்லது வாயில் ஆண்குறியைச் செருகுவது போன்ற பாலியல் செயல்கள் மூலம் எச்.ஐ.வி. பரவும் அபாயம் உள்ளது.

உண்மையில், தாய்ப்பால் மூலம் மட்டும் எச்.ஐ.வி. பரவும் நிகழ்தகவு 5%க்கும் குறைவாக உள்ளது. சில சந்தர்ப்பங்களில், இது 1%க்கும் குறைவாக உள்ளது. ஆனால், அது அந்த மக்கள் வாழும் சூழல்களில் உள்ள சுகாதார நிலைமைகள் மற்றும் அந்த குழந்தைகளின் நோய் எதிர்ப்புச் சக்தி அளவைப் பொறுத்தது. ஆனால், ஒரு சிறிய ஆபத்து உள்ளது. என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையேல், குழந்தைப் பருவத்தில் இருப்பவர்கள் மத்தியில், ‘எய்ட்ஸ்’, எச்.ஐ.வி பரவும் அபாயம் அதிகரிக்கும்.

சுகாதார அமைச்சின் தேசிய பாலியல் நோய்/ எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது காலாண்டு புள்ளி விபரத்தில் பிரகாரம், 4245 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 3,000 ஆண்களும், 1,245 பெண்களும் அடங்குகின்றனர். 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடையில் ஆண்கள் 10 பேரும் பெண்கள் இருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த காலப்பகுதியில் 12 பேர் மரணமடைந்துள்ளனர்

நாட்டில் ஒரு சிறிய ஆபத்து உள்ளது. என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையேல், குழந்தைப் பருவத்தில் இருப்பவர்கள் மத்தியில், ‘எய்ட்ஸ்’, எச்.ஐ.வி பரவும் அபாயம் அதிகரிக்கும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# “கடவுளாலும் தமிழரசுக் கட்சியை காப்பாற்ற முடியாது”

முருகானந்தன் தவம்

இலங்கை தமிழரசுக் கட்சி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 58 சபைகளில் போட்டியிட்டது. இதில் 12 சபைகளில் தமிழ் மக்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாகவே இருக்கிறார்கள். ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகளைப் பெறுவதற்காகவே அவற்றில் நாம் போட்டியிட்டோம், அப்படி பிரதிநிதித்துவத்தைப் பெற்றும் கொண்டோம். மிகுதி 46 சபைகளில் 34 சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நிர்வாகங்களை அமைத்துள்ளது. ஆகவே, 58 சபைகளில், 46இல் எமது இலக்கை அடைந்துள்ளோம். மிகுதி சபைகளிலும் இரண்டாவது இடத்தை வகிக்கிறோம். இது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றி என அக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் பெருமிதப்பட்டுள்ளார்.

ஆனால், நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில், 58 சபைகளில் 34 சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நிர்வாகங்களை அமைத்துள்ளபோதும், தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில், இது அவர்களுக்குப் படு தோல்வியே. ஏனெனில், இந்த சபைகளில் யாழ். மாநகரசபை உள்ளிட்ட பிரதான பல் சபைகளில் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களினால் நிராகரிக்கப்பட்ட, வெறுக்கப்பட்ட, குற்றம்சாட்டப்பட்ட டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் ஆதரவுடனேயே ஆட்சியமைத்துள்ள நிலையில், இதனை எப்படி பெரு வெற்றி என சுமந்திரனால் கூற முடியும்?

சாவகச்சேரி பிரதேச சபை உள்ளிட்ட இன்னும் சில பிரதேச சபைகளில் கூட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு மக்கள் ஆணை வழங்கியிருந்த நிலையில், மேற் குறிப்பிட்ட தமிழ் மக்களினால் நிராகரிக்கப்பட்ட கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக் கொண்டும் வழக்கு சதிகளை செய்து கொண்டும் திருவுளச்சீட்டு மூலமும் தமிழ் மக்களின் ஆணைக்கு மாறாக ஆட்சியை பின்கதவால் கைப்பற்றிவிட்டு தமிழ் மக்களின் ஆணை தமக்குக் கிடைத்திருப்பதாக சுமந்திரனால் எவ்வாறு உரிமை கோர முடியும்?

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில், 58 சபைகளில் 34 சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நிர்வாகங்களை அமைத்துள்ளதாக பொதுவாக கூறும் சுமந்திரன் வடக்கு மாகாணத்தின் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தமிழரசுக் கட்சி படுதோல்வி அடைந்தம் ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தும், அவற்றை தமது வறட்டு கௌரவத்தால் பறிகொடுத்தமை தொடர்பில் ஏன் வாய்திறக்கவில்லை? வவுனியா மாவட்டத்தில் மூவினங்களும் வாழ்கின்ற நிலையில், வவுனியா நகரசபையை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றிய போதும் மன்னாரில் தமிழ், முஸ்லிம்கள் மட்டும் வாழ்கின்ற அதிலும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற மன்னார் மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியினால் ஏன் ஒரு சபையைக் கூட கைப்பற்ற முடியவில்லை?

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய 3 மாவட்டங்களில் அதுவும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 17 சபைகளில் 11 சபைகளை அதிலும், பெரும்பான்மையான சபைகளை டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டிபி. சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் ஆதரவுடன் கைப்பற்றியமை தான் தமிழரசுக்கட்சிக்கு தமிழ் மக்கள் கொடுத்த ஆணையா?

இவ்வாறு தமிழரசுக் கட்சி வடக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களில் 3 மாவட்டங்களை மட்டுமே கைப்பற்றி தோல்வி முகம் கண்டுள்ள நிலையில், தனித் தமிழரசின் ஆட்சி அமைக்கும் விதத்தில் வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்த கிளிநொச்சி மாவட்டத்திற்குத் தலைமை வகிக்கும் சிறீதரன் எம்.பி. முல்லைத்தீவு மாவட்டத்திற்குத் தலைமை வகிக்கும் ரவிகரன் எம்.பி. ஆகியோருடன் தமிழரசின் தலைமை வன்மம் கொண்டு

> **கட்சி நீக்கங்களை மேற்கொண்டால் தமிழர்களின் தாய் கட்சியான தமிழரசுக் கட்சி விரைவில் காணாமல் போய்விடும் என்பதனை புதிய தலைமையான பதில் தலைவர் சிவஞானமும் பதில் பொது செயலாளர் சுமந்திரனும் சற்றேனும் தமிழர் நலன் சார்ந்து புரிந்து கொள்ள வேண்டும்**

இவ்விருவரையும் பழிவாங்கும் நோக்குடனும் கட்சியிலிருந்து ஒதுக்கும் வெளியேற்றும் திட்டத்துடனும் செயற்படுவது தமிழரசின் அரசியலையே முடிவுக்குக் கொண்டு வந்து விடும் என்பதனை தமிழரசின் பதில் தலைவர் சிவஞானமோ பதில் பொது செயலாளர் சுமந்திரனோ புரிந்து கொள்ள மறுக்கின்றனர்.

தமிழரசு வெற்றி கொண்ட முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் தான் பெயரிடுபவர்களையே தவிசாளர்களாக பிரதி தவிசாளர்களாக நியமிக்க வேண்டும் என்ற சுமந்திரனின் சர்வாதிகாரத்தால் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தலைமை தாங்கி பெரு வெற்றியைப் பெற்றுக்கொடுத்த ரவிகரன் எம்.பி. அந்தப் பதவியிலிருந்து வெளியேறுவதாக அறிவித்து ஒதுங்கியுள்ளார். அவருடன் எந்த சமரசமும் செய்யாது உடனடியாகவே தமது விசுவாசி ஒருவரை அந்தப் பதவிக்கு அமர்த்தி ரவிகரன் எம்.பி.வெற்றி பெற்றுக்கொடுத்த சபைகளுக்கு தமது விசுவாசிகளை தவிசாளர்களாகவும் பிரதி தவிசாளர்களாகவும் தமிழரசின் தலைமை நியமித்துள்ளது. ரவிகரன் வெற்றி பெற்றுக்கொடுத்துள்ளதால் தற்போதைக்கு தமிழரசுக்கு நெருக்கடிகள் ஏற்படாது விட்டாலும் இனி வரும் தேர்தல்களில் அதற்கான விளைவுகளைத் தமிழரசு எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

அதேபோன்று, சிறீதரன் எம்.பியின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழரசின் ஆட்சியமைந்த கரைச்சி பிரதேச சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ள சிறீதரனின் தீவிர விசுவாசியை அப்பதவியிலிருந்து அகற்றத் தமிழரசின் தலைமை திட்டமிட்டுள்ளது. அதற்காக அவர் மீது கட்சித் தலைமைக்குக் கட்டுப்படாத குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தமிழரசின் தலைமை தயாராகின்றது. இது அந்த தவிசாளருக்கு எதிரான நடவடிக்கை மட்டுமல்ல தமிழரசுக்குள் இருந்து கொண்டே தமிழரசின் தமிழ்த் தேசிய விரோத செயற்பாட்டைக் கடுமையாக எதிர்க்கும், பகிரங்கமாக விமர்சிக்கும் சிறீதரன் எம்.பியை கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கான முன்னோடி நடவடிக்கையாகவே தமிழரசின் தலைமையால் முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே ஏற்கெனவே பாராளுமன்றத் தேர்தலில் வடக்கில் பல ஆசனங்களை இழந்துள்ளதுடன், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலிலும், பல சபைகளை இழந்துள்ள தமிழரசுக் கட்சி, தன்னை மீண்டும் வலிதாக்கிக்கொள்ள, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக்கிக் கொள்ளக் கட்சிக்குள் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் பலப்படுத்தி அனைவரையும் ஒரே வீட்டுக்குள் கொண்டுவந்து விட்டுக் கொடுப்பு தன்மைகளுடன் தமிழரசின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டிய நேரத்தில் தலைக்கனம், வறட்டுக் கௌரவம், பிடிவாதம், நான் என்ற அகங்காரம் போன்றவற்றால் கட்சிக்குள் பிளவுகளை, குழப்ப நிலைகளை, பழிவாங்கல்களை, பதவி நீக்கங்களை, கட்சி நீக்கங்களை மேற்கொண்டால் தமிழர்களின் தாய் கட்சியான தமிழரசுக் கட்சி விரைவில் காணாமல் போய்விடும் என்பதனை புதிய தலைமையான பதில் தலைவர் சிவஞானமும் பதில் பொது செயலாளர் சுமந்திரனும் சற்றேனும் தமிழர் நலன் சார்ந்து புரிந்து கொள்ள வேண்டும். இல்லையேல், தந்தை செல்வா “கடவுளாலும் தமிழர்களைக் காப்பாற்ற முடியாது” என்று கூறியதை “கடவுளாலும் தமிழரசுக் கட்சியை காப்பாற்ற முடியாது” என்று கூற வேண்டிய நிலையே ஏற்படும்.



## வாழ்வியல் தரிசனம்

சுயநலமில்லாமல் வாழ்பவர்களைப் பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களை தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர்.

இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராள மனம் படைத்தோர் தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை.

இந்த உலகில் எல்லாமே நடக்கும். பெற்றோரை மதிக்காத பிள்ளைகள், ஆசானை மறந்த மாணவர்கள், கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என ஏராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர்.

சந்தோஷமாகக் கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும் போது, அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைவரிசையைக் காட்டுகின்றனர். எப்படி எச்சரிக்கை செய்தாலும் மக்கள் அதனைக் கேட்காமல் பணம், பொருள்களைத் துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களை தங்களின் நிரந்தர தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்களை எத்தர்களை மன்னிப்பதில்லை. பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி தீயோர்களை களைவதில் தங்கியுள்ளது.

– பருத்தியூர் பால.வைரவநாதன்

## கடிதங்கள்

### போக்குவரத்து பிரச்சினையால் அவதி

பதுளை மாவட்டத்தில் மிக உயரமான பிரதேசமாக கருதப்படும் பதுளை, நமுனுகுல மலை உச்சிக்கு அருகில் அமைந்துள்ள க்ளென் எல்பின் தோட்டத்தின் மக்கள் போக்குவரத்து பிரச்சினையால் அவதிப்படுகின்றனர்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமான சிறிய பேருந்து மாத்திரம் அப்பகுதியில் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளது. குறித்த வீதி மோசமான நிலையில் உள்ளதால் பேருந்தும் அடிக்கடி சேதமடைந்து, சேவையிலிருந்து அகற்றப்பட வேண்டிய நிலை ஏற்படுவதாக பேருந்தின் உரிமையாளர் கூறியுள்ளார்.

மேலும், தியானவல பிரதேசத்தில் இருந்து பாடசாலை செல்லும் மாணவர்கள் 10 கி.மீற்றருக்கும் மேற்பட்ட தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளதுடன், முச்சக்கர வண்டி கூட வீதியில் பயணிப்பதில்லை.

பதுளைக்கு செல்ல 5,000 ரூபாய் வசூலிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நோயாளிகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது மிகவும் மோசமாக பாதிக்கப்படுவதாகவும் இதற்கு முன்னர் கர்ப்பிணிப் பெண்கள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ள சம்பவமும் நடந்துள்ளது.

அத்துடன், வைத்தியசாலைக்கு நடந்து செல்லும் சில முதியவர்கள் அதிக சோர்வு ஏற்பட்டு வழியில் இறந்துள்ளதாகவும் மக்கள் கூறுகிறார்கள். மேலும், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- பாலித்த ஆரியவங்ச

### கதிர்காமத்தில்

# ‘ஓம்’ இல்லை

## கதிர்காமம் தமிழ்மக்களிடமிருந்து முற்றாகவே கைநழுவிப் போகின்றதா?






வித்தகர் விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா

கதிர்காமத்தில் தமிழ் மக்களது பாரம்பரியங்கள் மற்றும் அவர்களது மடங்கள் அடையாளங்கள் அழிக்கப்பட்டமை காரணமாக தமிழ் மக்களுக்கும் கதிர்காமத்திற்கும் இடையிலான உறவில் இடைவெளி ஏற்பட்டது என்பது அண்மைக் காலமாக கூறப்பட்டு வருகிறது.

எனினும், யாழ். செல்வச்சந்நிதி தொடக்கம் வடக்கு கிழக்கு மலையகம் என நாடெங்கிலும் இருந்து பாதயாத்திரை மற்றும் ஏனைய வழிகளில் தமிழர்கள் இலட்சக்கணக்கில் கதிர்காமம் சென்று வருகின்றனர்.

இந்த பாதயாத்திரை மறுசீரமைக்கப்பட வேண்டும், வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்றெல்லாம் வருடாவருடம் உற்சவ காலப்பகுதியில் கூறுவார்கள். பின்னர் அந்த வேகம் குறைந்து விடும். இம்முறை 50 வீதமானோர் பௌத்தர்கள் சப்பாத்து கண்ணாடி சகிதம் சுற்றுலாப் பயணிகள் போல் பயணித்த தையும் காணமுடிந்தது. ஆனால், வெள்ளைக்காரர்கள் எம்மவர் போல் வேட்டியுடன் திலகமிட்டு பயணித்ததையும் காணமுடிந்தது. எம்மவர்களில் சிலர் பைலாக கும்மாளம் என்று பயணித்த மையும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது

அந்தக் காலத்தில் தமிழருக்கும் கதிர்காமத்திற்கும் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. எனினும் இந்தத் தொடர்பு 1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறைவடைந்தது, இடைவெளி ஏற்படத் தொடங்கி விட்டது.

இதற்கு பல காரணங்கள் உள்ளன.

குறிப்பாக, கதிர்காமத்தில் காணப்பட்ட இராமகிருஷ்ண மிஷன் மடத்தை, அரசாங்கம் சுவீகரித்துக்கொண்ட பின்னர், தமிழ் மக்கள் அங்கே செல்வதைக் குறைத்துக்கொண்டார்கள்.

குறித்த கதிர்காமம் இ.கி.மடம் 1953 இல் பிரதமர் டட்லி சேனநாயக்காவால் திறந்து வைக்கப்பட்டது.

1943ஆம் ஆண்டு காலப் பகுதியில் பல அமைப்புகள் கதிர்காமத்தில் உள்ள புனித ஆலயத்திற்கு வரும் ஆயிரக்கணக்கான யாத்திரீகர்களுக்கு சேவை செய்யத் தொடங்கியது. அதன் ஓரங்கமாக உலகளாவிய ரீதியில் வியாபித்து ஜீவசேவையாற்றிவரும் இராமகிருஷ்ண மிஷன் அமைப்பும் கதிர்காமத்தில் காலூன்றியது.

அதன் காரணமாக விசாலமான கட்டிடங்கள் கட்டப்பட்டு ராமகிருஷ்ண மிஷன் மடம் 1953ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் தேதி அப்போதைய இலங்கைப் பிரதமராக இருந்த மாண்புமிகு டட்லி சேனாநாயக்க அவர்களால் முறையாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஹ அப்போதிலிருந்து, மத வேறுபாடின்றி யாத்ரீகர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்பட்டது.

ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் நடக்கும் வருடாந்த திருவிழாவின் போது, 17 நாட்களுக்குத் தொடர்ச்சியாக, ஒரு நாளைக்குப் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட (10,000) யாத்ரீகர்களுக்கு இலவச உணவை மிஷன் வழங்கியது. மத விரிவுரைகள், சொற்பொழிவுகள் மற்றும் பஜனைகள் மடத்தில் வழக்கமான நடவடிக்கைகள் 1976ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படும் வரை மிஷன் ஒரு குடியுரிமை சுவாமியின் மேற்பார்வையின் கீழ் அதன் உன்னத சேவைகளைத் தொடர்ந்தது.













அத்தகைய உன்னத ஜீவ சேவையாற்றிய இகிமிசன் மடத்தை மீண்டும் ஒப்படைத்து சமாதான பூமி புனித பூமி என்ற வாசகத்திற்கு அர்த்தம் சேர்க்குமாறு உலக இந்துக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்து கலாசார அமைச்சு திணைக்களம் அங்கு யாத்ரீகர்கள் விடுதியை அமைத்திருந்தாலும் அதிலும் தென்பகுதி மக்களே முன் பதிவுகளைச் செய்து கொள்வதால், தமிழ் மக்கள் அங்கே வந்து தங்குவதற்கு இடம் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்து யாத்திரீகர் விடுதியில் பெரும்பாலும் உற்சவம் தொடங்க முன்பே முன்பதிவுகள் பூர்த்தி அடைந்து விடும். அன்னதானம் நடப்பதால் அவர்களுக்கு பொது மண்டபங்கள் ஒதுக்கப்படுகின்றன

சிலவேளைகளில் பெரஹரா கலைஞர்கள் தங்குவார்கள்.

அதாவது இந்துக்கள் உணர்வோடு தங்க அங்கு இடமில்லை.

அன்று “கதிர்காம வாசலில் ‘ஓம் முருகா’ என தமிழில் வாசகம் காணப்பட்டது. ஆனால், தற்போது ‘ஓம்’ என்ற மந்திரத்தைச் சொல்லி நீக்கி விட்டார்கள். இன்றும் முகப்பில் ஓம் இல்லை.

அதேபோன்று, கதிர்காம கந்தன் மீது பன்னிரண்டாம் நூற்றாண்டில் பாடப்பட்ட திருப்புகழை அங்கே பாடுவதை தற்போது நிறுத்திவிட்டார்கள். தமிழ் மக்கள் மலையேறுவதற்குச் சென்றால், அங்கே இருக்கும் வாகன ஓட்டுநர்கள் கட்டுப்பாடற்ற முறையில், வாடகை பணம் வசூலிக்கின்றார்கள்.

“அகில இலங்கை இந்து மாமன்றம், யாத்திரீகர் மடத்தை அமைப்பதற்குக் கதிர்காம ஆலய நிர்வாகம் காணியொன்றை வழங்க வேண்டும்.

, கதிர்காம கந்தனது அற்புதங்கள் பெருமைகள் ஆய்வுகள் தொடர்பான தமிழ் புத்தகங்களை அங்கே காட்சிப்படுத்த வேண்டும்.

ஆலயத்தின் வாசகங்களையும் அறிவித்தல்களையும் தமிழ் மொழியிலும் காட்சிப்படுத்த வேண்டும். இன்று அவை நடக்காமலில்லை. எனினும் போதுமானதாக இல்லை.

இதனை முன்னர் ஒரு தடவை தெல்லிப்பழை துர்கா தேவஸ்தானத்தின் தலைவர் ஆறுதிருமுகனும் தெரிவித்திருந்தார்.அத்துடன், கதிர்காமத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாத்திரிகள் தங்குமிடம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான காணியைக் கதிர்காம ஆலய நிர்வாகம் வழங்க வேண்டும்” எனவும் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால், அக் கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கிறது.

இனசௌன்யம் நல்லிணக்கம் ஐக்கிய சமாதான பூமி பற்றிப் பேசுகின்ற அதேவேளை மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்க வேண்டும் என்பது இக் கட்டுரையின் நோக்கமாகும்.





# ‘கலை உலகின் கலைக் களஞ்சியம்‘



எஸ்.நயனகணேசன்

எனக்கொரு நம்பிக்கை. அது வாசிப்பினூடாக பெற்றுக்கொண்ட அனுபவம். ஒரு படைப்பாளி வாசகனை தன்னுடைய எழுத்துக்களுக்கப்பால் அவன் உணர்வுகளை எடுத்துச்செல்வாரேயானால் அப்படைப்பு சமூகத்தை வழி நடத்துவது மட்டுமின்றி, காலத்தால் என்றும் நிலைத்திருக்கும்.

வாழ்க்கையை இலக்கியங்களிலிருந்தே கற்கலாம் என்ற உண்மைக்கு மனிதர்களின் சுயசரிதங்களும் சான்று பகர்கின்றன.

அந்த வகையில், அண்மையில் நான் படித்த வானலைகளில் ஒரு வழிப்போக்கன் என்ற சுயசரிதம் வாசகனின் தன்னம்பிக்கையற்ற கருதுகோள்களை தகர்ப்பதுடன் புத்துணர்ச்சி மிக்க சிந்தனைகளுக்கும், நாவடக்கம் மற்றும் அவையடக்கம் என்ற மகத்துவங்களுக்கும் புடம் போடுவதுடன் உணர்த்தவும் செய்கின்றது.

தமிழுலகின் நட்சத்திர அறிவிப்பாளர், சிம்மக்குரலோன் பி.எச்.அப்துல் ஹமீதின் வாழ்வனுபவக் குறிப்புக்கள் அனைவராலும் கற்கத்தக்கது. கற்ற பின் அதற்குத் தக நிற்கத் தக்க சுயசரிதமும் கூட.

ஒருவரின் விடாமுயற்சியும் தூய்மையான சிந்தனையும் வெற்றியைப் பெற்றுத்தரும் என்ற இயற்கை விதி காந்தக்குரலோன் ஹமீதின் வாழ்க்கை பாடங்களிலிருந்தும் கற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு ஊடகவியலாளனும் மாத்திரமன்றி, ஒவ்வொரு தனி மனிதரும் கற்றறிய வேண்டிய பல அரியத்தகவல்களுடனும் அறிவியலுடனும் படைப்பாக்கப்பட்டுள்ளது வானலைகளில் ஒரு வழிப்போக்கன்.

ஒரு மனிதன் தன்னை தன் அகக் கண்களால் பார்க்கச் செய்யும் எழுத்துக்கள் எவ்வளவு வலிமை வாய்ந்ததென உணர்வதும் ஒரு கொடைதான். அதனை இப்புத்தகம் செவ்வனே நிறைவேற்றியுள்ளது.

அந்த வகையில், ஒரு படைப்பாளனின் உண்மையான அனுபவப் பகிர்வு திறந்த புத்தகமாய் அனைவராலும் படிக்கப்படச் செய்வதென்பது போற்றுதற்குரியது. ஒருவரின் அனுபவம் மற்றொருவரை செப்பனிடும் என்பதற்கு வானலைகளில் ஒரு வழிப்போக்கன் தக்கன பிழைத்தல்.

இலங்கை வானொலி வரலற்றில் மட்டுமல்ல உலக வானொலி வரலாற்றிலும தனக்கென முத்திரைப் பதித்துக்கொண்ட அன்பு அறிவிப்பாளர் ஹமீத் கடந்து வந்த அரைநூற்றாண்டு அனுபவ பாதை எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த உசாத்துணை.


வானொலியை கண்டு பிடித்த மார்க்கோனியின் அருங்காட்சியக பிரவேச அனுபவத்தினை இப்படி விபரிக்கின்றார்.

“தென்கிழக்கு ஆசியாவிலே வானொலியை ஆரம்பித்த முதல் நாடு இலங்கை.

அந்த வானொலி நிலையத்திலிருந்து ஓர் ஒலிபரப்பாளர், இந்த அருங்காட்சியகத்தினைக் காணும் ஆவலோடு வந்திருக்கிறார். முன் அனுமதியின்றி வந்தமைக்கு மன்னிக்கவும்.” என்று தெரிவித்த மறுகணம், மூடியிருந்த அந்த அருங்காட்சியகத்தின் கதவுகள் அகலத் திறந்தன. அதன் பொறுப்பாளர் திரு டிம் வேண்டர் (*Tim Wander*) மலர்ந்த முகத்துடன் வெளியில் வந்து கை குழுக்கியதோடு, ஆரத்தழுவியும் அவனை வரவேற்றார். ஆகாயத்தில் மிதப்பது போன்ற உணர்வுடன் அவ்வருங்காட்சியகத்துள் காலடியெடுத்து வைத்தான். இவனது அறிவுக்கெட்டியவரை ‘இலங்கை வானொலி வரலாற்றில் வேறு எவருக்கும் கிடைக்காத வாய்ப்பு இவனுக்குக் கிடைத்திருக்கிறது’ என உணர்ந்த போது, உடலெங்கும் பரவசம் பரவியது. கூடவே. ‘தாய் வீடு தந்த அங்கீகாரம் அல்லவா இது’ என்றும் உணர்ந்தபோது, அந்தத் தாய் வீடாகிய இலங்கை வானொலிக்கு மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டே உள்ளே நுழைந்தான். (பக்கம்: 27)

இந்நிகழ்வே இப்புத்தகத்திற்கான மூலக் கருதுகோளாக அமைந்ததாகவும் கூறுகின்றார் நூலாசிரியர்.

இலங்கை தமிழ் இசை வரலாற்றில் பொப்பிசைப்பாடல்களை பிரபல்யப்படுத்துவதில் ஹமீத் அவர்கள் எடுத்துக் கொண்ட சிரத்தை என்றென்றைக்கும் சிலாகிக்கத்தக்கவை. பொப்பிசை மன்னர்களான நித்தி கனகரட்ணம் மற்றும் ஏ.இ.மனோகரன் போன்றவர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்த பெருமையும் அன்பு அறிவிப்பாளரையே சேரும். எழுபதாம் ஆண்டுகால மகிழ்ச்சியினை மீணடும் ரசிக்கச் செய்கின்ற நினைவூட்டலை பகிர்ந்து கொள்ளச் செய்கின்றது இப்புத்தகம். வாசகன் நிச்சயம் மெய் சிலிர்த்துப் போவான்.




“சின்ன மாமியே உன் சின்ன மகளங்கே? பள்ளிக்குச் சென்றாளோ படிக்கச் சென்றாளோ! அந்த கால நினைவுகளை அழகாய் மீட்டுகின்றது சலனமற்ற இசையுணர்வுடன்.

அத்துடன், தென்னிந்திய சினிமா நட்சத்திரங்களுடனான நட்பு அதனால் கிடைத்த கிர்த்தி அனைத்தையும் அடக்கத்துடன், இலங்கை வானொலிக்கே சமர்ப்பணம் செய்கின்றார். இந்த வரலாற்று தகவல்கள் நிறைந்த இப்புத்தகத்தினை படிக்கையில் இலங்கை வானொலி மீதான மதிப்பும் பெருமையும் பன்மடங்கு அதிகரிக்கின்றது. இதுவே நூலாசிரியரின் வெற்றியும் கூட.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடனான முதல் சந்திப்பும் பேட்டியும்...

‘றன்முத்து ஹொட்டலின் ஐந்தாவது தளத்தில் கடலை நோக்கியதாக அமைக்கப்பட்டிருந்த திறந்தவெளி உப்பரிகை போன்ற ஒரு தளத்திற்கு இவனை அழைத்துப் போனார் குருமூர்த்தி. “அதோ அண்ணன் உக்காந்திருக்கார்... போங்கோ” என்று இவனை விட்டுவிட்டு அவர் போய்விட்டார். அது ஒரு பௌர்ணமி தினம். பூரண நிலவொளியில், சிறிது தூரத்தில் அந்தத் தளத்தின் சுற்றுச்சுவர் ஓரத்தில், கடலைப் பார்த்தபடி நாற்காலியில் அமர்ந்திருக்கிறார் நடிகர் திலகம்.

இளவயதில் இவன் உள்ளத்தில் கலையுணர்வுகளை விதைத்த இவனது மானசீக குருவல்லவா! தான் வந்ததை அவருக்கு எப்படித் தெரிவிப்பது? அவரை எப்படி அழைப்பது? ஐயா’ என்றா? சார் என்றா? நாவும் வறண்டுபோனது போன்ற பிரமை. மெதுவாக செருமினான். உடனே திரும்பிப் பார்த்தவர், “வாங்கோ கேப்டன் சாம்பசிவம்” என்றார்.

இவனுக்கோ உடம்பெல்லாம் சில்லிட்டுப் போனது. காரணம். அவர் இவனை வரவேற்ற விதம். ‘அடடா! நாம் தயாரித்து நடிக்கும் நாடகத்தை இவர் கேட்டிருக்கிறார். அதில் நாம் ஏற்று நடிக்கும் பாத்திரத்தின் பெயர்கூட இவரது உள்ளத்தில் பதிந்திருக்கிறது’ என்ற உண்மையை அந்த ஒரே விநாடியில் புரிந்து கொண்டதனாலேயே இவனுக்குள் இன்ப அதிர்ச்சி. பேச நா எழவில்லை. இவனது நிலையைப் புரிந்து கொண்ட அவர் எழுந்து இவனது தோளில் கைபோட்டு அணைத்தவாறே, நம்ம ரூமுக்குப் போயி இந்தப் பேட்டியை *Record* பண்ணலாம்” என்று அழைத்துச் சென்றார். (பக்கம்: 73)

இதைவிட இலங்கை வானொலிக்கு வேறென்ன பெருமை வேண்டும்!

இலங்கை வானொலி வரலாற்றில் தமிழ் அறிவிப்பாளர்களின் மகத்தான பங்களிப்பை வரிசைக்கிரமமாய் உண்மையான தரவுகளுடன் அடுக்கியுள்ளார். அனைத்து பள்ளி மாணவர்களாலும் படிக்கப்பட வேண்டிய புத்தகம். ஒவ்வொரு நூலகங்களிலும் இருக்கப்பட வேண்டிய நூல்.

இலங்கை தமிழ் வானொலி குரல் வரலாற்றில் ஹமீத் தவிர்க்கமுடியாத ஒரு சகாப்தம்.

நைஜீரியா

லொறி மீது பேருந்து மோதி விபத்து

# 21 பேர் மரணம்

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடான நைஜீரியாவின் கானோ மாகாணத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் செவ்வாய்கிழமை (08) அன்று 23 பேர் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பேருந்து ஒன்று திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, எதிரே வந்த லொறியுடன் வேகமாக மோதியதில் 2 பெண்கள் உட்பட 21 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்துள்ளனர் என அந்நாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன.

இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

வீதி விதிகளை மீறி பேருந்து சாரதி செயல்பட்டதே இந்த விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



சீனா

சுற்றுலா வர விசா தேவையில்லை


## 74 நாடுகளுக்கு அனுமதி

ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்குப் பயணிப்பதற்கு கடவுச்சீட்டு, விசா ஆகியவை தேவைப்படும். அதேசமயம், வெளிநாட்டினரை ஈர்க்க சில நாடுகள் விசா இல்லாமல் பயணிக்க அனுமதி வழங்கி வருகிறது.

இந்நிலையில், சீனா புதிதாக 74 நாடுகள் விசா இன்றி அந்நாட்டிற்குள் பயணிக்கலாம் என அறிவித்துள்ளது.

இப்படி பயணம் மேற்கொள்பவர்கள் 30 நாள் வரை சீனாவில் தங்கிக் கொள்ளலாம். சீனாவில் சுற்றுலாவை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் வரும் 30ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் எனபது குறிப்பிடத்தக்கது.



பிரான்ஸ்

காட்டுத்தீ:

## 700 ஹெக்டேர் எரிந்து சேதம்; 13 பேர் காயம்

பிரான்ஸ் மார்ஷெல் நகரில் காட்டுத்தீ பரவி வருகிறது. இதனால், விமானம், பேருந்து, புகையிரதம் சேவைகளும் முடங்கின. பிரதான வீதிகள் மற்றும் பல்வேறு சுரங்கப் பாதைகளும் மூடப்பட்டு உள்ளன. பிரான்சின் 2ஆவது மிக பெரிய விமான நிலையங்களில் ஒன்றான மார்ஷெல்லே விமான நிலையத்தில் விமானச் சேவை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பிரான்சின் பவுசஸ்-டு-ரோனி, வார் மற்றும் வாகுளூஸ் ஆகிய 3 தெற்கு பகுதி நகரங்களில் சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. காட்டுத்தீயால் 13 பேர் காயமடைந்துள்ளனர். 700 ஹெக்டேர் எரிந்து சேதமடைந்துள்ளது.

டெக்சாஸ்

## 28 குழந்தைகள் உட்பட 84 உடல்கள் மீட்பு

அமெரிக்காவின் தென்மத்திய டெக்சாஸ் மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு முதல் தொடர் கனமழை பெய்து வருகிறது. குவாடலூப் ஆறு முழுவதும் நிரம்பி வெள்ள நீர் வெளியேறுவதால் ஆற்றங்கரையோரத்தில் உள்ள பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கிக் கிடக்கின்றன.

குவாடலூப் ஆற்றை ஒட்டிய இடத்தில் கோடைக்கால முகாமில் 700க்கும் மேற்பட்ட பெண்கள் தங்கி இருந்தனர். அவர்கள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். இந்நிலையில், 24 குழந்தைகள் உள்பட 84 பேரின் உடல்களை மீட்டுள்ளதாக மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இதையும் சேர்த்து டெக்சாஸ் மழை, வெள்ளத்தில் சிக்கிப் பலியானோர் எண்ணிக்கை 100ஆக அதிகரித்துள்ளது.





தமிழ்நாடு

2 கோடி 'டார்கெட்டை' அடைய

## விஜய்ன் அடுத்த 'ப்ளேன்'

தமிழ்நாட்டில் 2 கோடி பேரை கட்சியின் உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து ஒன்லைன் உறுப்பினர் சேர்க்கையை நடிகரும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான ஆரம்பித்து வைத்துள்ளார்.

வாட்ஸ்அப், டெலிகிராம் லிங்க் மூலமாக எளிதான முறையில் கட்சி உறுப்பினராக சேர்க்கையை நடத்தி வருகின்றனர்.

இதையடுத்து, 2ஆம் கட்ட உறுப்பினர் சேர்க்கைக்கு புதிய செயலியை அறிமுகம் செய்ய தவெக தலைவர் விஜய் திட்டமிட்டுள்ளதாகவும், இதற்கான பெயர் மற்றும் செயலியை த.வெ.கவின் கொள்கைத் தலைவர்களில் ஒருவரான காமராஜரின் பிறந்தநாளான வரும் 15ஆம் திகதி அறிமுகம் செய்ய முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், த.வெ.க. மாவட்டச் செயலாளர்கள் மற்றும் சமூக ஊடக நிர்வாகிகள் கூட்டம் சென்னை பனையூரில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. அப்போது, புதிய செயலி குறித்து பொதுச்செயலாளர் ஆனந்த் நிர்வாகிகளிடம் எடுத்துரைத்ததாகக் கூறப்படுகிறது.

வாக்காளர் பட்டியல் இருக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள அந்த செயலியை வைத்து நிர்வாகிகளும், பூத் கமிட்டி உறுப்பினர்களும் வீடு வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குஜராத்

பாலம் இடிந்து விழுந்து

## 9 பேர் பலி

குஜராத் மாறிலத்தின் வதோதராவையும், ஆனந்த் மாவட்டத்தையும் இணைக்கும் காம்பிரா பாலம் இடிந்து விழுந்ததில், ஐந்து வாகனங்கள் ஆற்றில் மூழ்கி 9 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வதோதராவின் பத்ரா தாலுகாவில் மஹிசாகர் ஆற்றில் உள்ள காம்பிரா பாலத்தின் ஒரு பகுதி புதன்கிழமை (09) காலை 7.30 மணியளவில் இடிந்துள்ளது. இதில் ஆற்றில் 5 வாகனங்கள் விழுந்ததில், 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆனந்த் மற்றும் வதோதரா மாவட்டங்களை இணைக்கும் இந்தப் பாலத்தில் எப்போதும் காலை நேரத்தில் கூட்ட நெரிசல் அதிகம் இருக்கும். இந்த நிலையில் சம்மபவத்தன்று இரண்டு லொறிகள், ஒரு வேன் மற்றும் ஒரு பிக்அப் வேன் உட்பட நான்கு வாகனங்கள் பாலத்தைக் கடக்கும்போது திடீரென பாலம் இடிந்து விழுந்துள்ளது.

வாகனங்கள் ஆற்றில் விழுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு மிகப்பெரிய விரிசல் சத்தம் கேட்டதாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். விபத்து நடந்தவுடன் தீயணைப்புப் படை குழுக்கள், உள்ளூர் பொலிஸார் மற்றும் வதோதரா மாவட்ட நிர்வாகத்தினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளைத் தொடங்கினர். உள்ளூர் மக்களும் மீட்புப்பணிக்கு உதவி வருகின்றனர்.

மத்திய குஜராத்தை சவுராஷ்டிராவுடன் இணைக்கும் முக்கிய பாதையாக உள்ள இந்தப் பாலம், அரசால் முறையாக பராமரிக்கப்படாததால் இந்த விபத்து நடந்ததாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.



பங்களாதேஷுக்கு எதிரான

# தொடரைக் கைப்பற்றிய இலங்கை

பங்களாதேஷுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இலங்கையும், இரண்டாவது போட்டியை பங்களாதேஷும் வென்ற நிலையில் பல்லேகலவில் செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்ற தீர்மானமிக்க மூன்றாவது போட்டியை இலங்கை வென்ற நிலையிலேயே 2-1 என தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 285/7 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: குசல் மெண்டிஸ் 124 (114), சரித் அசலங்க 58 (68), பதும் நிஸங்க 35 (47) ஓட்டங்கள்.

பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 2/48, தஸ்கின் அஹ்மட் 2/51, ஷமிம் ஹொஸைன் 1/30, தன்ஸிம் ஹஸன் சகிப் 1/41, தன்வீர் இஸ்லாம் 1/61)

பங்களாதேஷ்: 186/10 (39.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: தௌஹிட் ஹிரிடோய் 51 (78), மெஹிடி ஹஸன் மிராஸ் 28 (25), பர்வீஸ் ஹொஸைன் எமொன் 28 (44), ஜாகிர் அலி 27 (35) ஓட்டங்கள்.



பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 3/33, துஷ்மந்த சமீர 3/51, டுனித் வெல்லலாகே 2/33, வனிது ஹசரங்க 2/35)

போட்டியின் நாயகன்: குசல் மெண்டிஸ்

தொடரின் நாயகன்: குசல் மெண்டிஸ்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரானது இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

கழக உலகக் கிண்ணம்:

## இறுதிப் போட்டியில் செல்சி

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி தகுதி பெற்றுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் புதன்கிழமை (09) அதிகாலை நடைபெற்ற பிரேஸிலியக் கழகமான புளூமினிஸுடனான அரையிறுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றே இறுதிப் போட்டிக்கு செல்சி தகுதி பெற்றது.

செல்சி சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஜோவா பெட்ரோ பெற்றிருந்தார்.




இன்று ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்ட்:

## இந்தியாவை வெல்லுமா இங்கிலாந்து?

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியானது லோர்ட்ஸில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்தும், இரண்டாவது போட்டியில் இந்தியாவும் வென்ற நிலையில் இப்போட்டியில் இந்திய அணிக்குத் திரும்பவுள்ள ஜஸ்பிரிட் பும்ரா பிரசீத் கிருஷ்ணாவை பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. தவிர நிதிஷ் குமார் ரெட்டியை சாய் சுதர்சனும், வொஷிங்டன் சுந்தரை குல்தீப் யாதவ்வும் பிரதியிடும் வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

மறுபக்கமாக இங்கிலாந்து அணியில் பிறைடன் கார்ஸை ஜொஃப்ரா ஆர்ச்சர் பிரதியிடுவதோடு, ஜொஷ் டொங்கை ஜேமி ஒவெர்ட்டன் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போட்டிக்கான ஆடுகளமானது வேகப்பந்துவீச்சுக்கு சாதகமானதாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.



இங்கிலாந்துக் குழாமில் ஜேக்கப் பெத்தெல் காணப்படுகின்ற நிலையில், ஒலி போப் தொடர்ச்சியாக ஓட்டங்களைப் பெற வேண்டிய கடப்பாடு காணப்படுகின்றது.

பங்களாதேஷுக்கு எதிரான தொடர்:

## பாகிஸ்தான் குழாமில் நசீம் ஷா இல்லை

பங்களாதேஷுக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் குழாமில் நசீம் ஷா, ஷகீன் ஷா அஃப்ரிடி, மொஹமட் வாஸிம் ஆகியோர் இடம் பெறவில்லை.

இவர்கள் தவிர, காயம் காரணமாக ஹரிஸ் றாஃப், ஷடாப் கான் ஆகியோரும் குழாமில் இடம்பெறவில்லை.



குழாம்: சஹிப்ஸடா பர்ஹான் (விக்கெட் காப்பாளர்), சைம் அயூப், பக்கர் ஸமன், மொஹமட் ஹரிஸ் (விக்கெட் காப்பாளர்), ஹஸன் நவாஸ், சல்மான் அக்ஹா (அணித்தலைவர்), குஷ்டில் ஷா, பஹீம் அஷ்ரஃப், ஹுஸைன் தலாட், மொஹமட் நவாஸ், அப்ரார் அஹ்மட், சுஃபியான் முக்கீம், அப்பாஸ் அஃப்ரிடி, அஹ்மட் டனியால், சல்மான் மிர்ஸா.

சிம்பாபேவுக்கு எதிரான

## தொடரை வென்ற தென்னாபிரிக்கா

சிம்பாபேவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா வென்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்ற தென்னாபிரிக்கா, புலவாயோவில் ஞாயிற்றுக்கிழமை (06) ஆரம்பித்து செவ்வாய்க்கிழமை (08) முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியை இனிங்ஸ் மற்றும் 236 ஓட்டங்களால் வென்ற நிலையிலேயே 2-0 என்ற ரீதியில் தொடரை வென்றது.

மூன்றாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 51 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த சிம்பாப்வே, செனுரன் முத்துசாமி (3), அணித்தலைவர் வியான் முல்டர், கோடி யூசுஃப் (2), கொர்பின் பொஷ்ஷிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 220 ஓட்டங்களையே பெற்றது. நிக் வெல்ஷ் 55, அணித்தலைவர் கிறேய்க் எர்வின் 49, தகுட்ஸ்வனஷே கைட்டானோ 40 ஓட்டங்களைப் பெற்றனர்.



இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் முல்டர் தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 10, ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.